RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 271 அக்டோபர் 4, 2026 ஞாயிற்றுக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் இன்று ஓய்கிறது பிரசாரம்

## தலைவர்கள் தீவிர ஓட்டு வேட்டை..!

சென்னை, அக்.4-

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு 6-ந்தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலில் 5 முனை போட்டி நிலவுகிறது. 2 தொகுதிகளிலும் தலைவர்கள் முகாமிட்டு தீவிர தேர்தல் பிரசாரம் செய்து வருகின்றனர். இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் ஓய்கிறது.

**விஜய், மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி**

இந்தநிலையில் முதல்-அமைச்சர் விஜய், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் நேற்று ஒரே நாளில் 'ரோடு ஷோ' மூலம் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டனர்.

மதுராந்தகம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து முதல்-அமைச்சர் விஜய் நேற்று ரோடுஷோ நடத்தினார். இதற்காக நீலாங்கரை இல்லத்தில் இருந்து மதியம் 1 மணிக்கு காரில் புறப்பட்ட அவருக்கு வழியெங்கும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சாலையின் இரு பக்கத்திலும் திரண்டிருந்த தொண்டர்கள் விஜய் பயணித்த கார் மீது பூக்களை தூவி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மாமண்டூர் சந்திப்பில் இருந்து 2.30 மணிக்கு முதல்-அமைச்சர் விஜய், 'ரோடு ஷோ'வை தொடங்கினார். திறந்தவெளி வேனில் நின்றபடி மக்களிடையே வாக்கு சேகரித்தார்.

**40 இடங்களில் வாக்குசேகரிப்பு**

தொடர்ந்து புக்கத்துரை சந்திப்பு, பழையனூர் சந்திப்பு, படாளம்



சந்திப்பு பகுதியில் ஏராளமானோர் திரண்டு இருந்து அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அங்கு பரிசு பொருட்களுடன் காத்திருந்த பொது மக்களுக்காக தனது வாகனத்தை நிறுத்திய முதல்-அமைச்சர் விஜய், அவர்களின் பரிசுகளை அன்புடன் பெற்றுக்கொண்டார். அவருக்கு செங்கோல், சாமி சிலைகள், எம்.ஜி.ஆர். அவரை ஆசிர்வதிப்பது போன்ற படங்கள், வேல், பூங்கொத்துகளை அவருக்கு வழங்கினர்.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் திறந்தவெளி வாகனத்தில் பிரசாரம் மேற்கொண்ட முதல்-அமைச்சர் விஜய்யை காண அலை, அலையாய் மக்கள் கூட்டம் திரண்டு வந்தது. அவர்களை பார்த்தும் விஜய் விசில் ஊதி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

ஜானகிபுரம், கருங்குழி, அய்யனார் கோவில் சந்திப்பு, மாம்பாக்கம், முதுகரை சந்திப்பு, மேல்மருவத்தூர் கோவில் சந்திப்பு, சரவம்பாக்கம் சந்திப்பு, கீழ் அத்திவாக்கம், எலப்பாக்கம், மேளச்சேரி, தண்டலம் உள்பட 40 இடங்களில் அவர் வாக்கு சேகரித்தார்.

எல்.எண்டத்தூரில் தனது வாகனத்தை நிறுத்தி கீழே இறங்கிய அவர், அங்கிருந்த டீக்கடையில் டீ குடித்தார். அந்த ஊர் பெரியவர்களுடன் அமர்ந்து, சிறிது நேரம் உரையாடினார். டீக்கடைக்காரரிடம், 'டீ நன்றாக இருக்கிறது' என்று கூறினார்.

கிளியாநகர் பகுதியில் வானத்தை நிறுத்தி கீழே இறங்கிய முதல்-அமைச்சர் விஜய், அங்கு வயல்வெளியை ஆய்வு செய்தார். அந்த பகுதியில் நின்றிருந்த பெண்களிடம் விஜய் வாக்கு சேகரித்தார். செம்பூண்டி பகுதியில், மாற்று திறனாளிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களையும் வாங்கிக்கொண்டார்.

**டிராக்டர் ஓட்டிய விஜய்**

ராமபுரம் பகுதியில் வயலில் உழவு பணி நடந்து கொண்டிருந்தது. இளைஞர் ஒருவர் டிராக்டர் ஓட்டி கொண்டிருந்தார். இதைபார்த்ததும் முதல்-அமைச்சர் காரில் இருந்து இறங்கி வயலுக்கு சென்றார்.

முதல்-அமைச்சரை பார்த்ததும் அந்த இளைஞர் டிராக்டரில் இருந்து இறங்கி வந்தார். அவரின் தோளில் தட்டி கொடுத்த விஜய், அந்த டிராக்டரில் ஏறி, டிராக்டர் ஒட்டினார்.

ஆணைக்குன்னம் பகுதியில் காரில் இருந்து இறங்கி வீடு, வீடாக விஜய் வாக்கு சேகரித்தார். அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்தனர். இதனை புன்னகையுடன் ஏற்றுக்கொண்ட முதல்-அமைச்சர் விஜய், தன்னை ஆரத்தி எடுத்தவர்களுக்கு ஆரத்தி எடுத்தார்.

மதியம் 2.30 மணிக்கு தொடங்கி, 6.30 மணி வரை 4 மணி நேரம் வாகனத்தில் நின்று கொண்டே மக்களை அவர் சந்தித்தார். தேரடி தெருவில் அவர் தனது தேர்தல் பிரசாரத்தை நிறைவு செய்தார்.

**மு.க.ஸ்டாலின் 'ரோடு ஷோ'**

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து, அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று தாராபுரம் அமராவதி சிலையில் இருந்து ரோடு ஷோ சென்று பிரசாரம் செய்தார்.

தாராபுரம் பெரிய கடைவீதி, பூக்கடை வீதி உள்பட முக்கிய பகுதிகள் வழியாக சுமார் 2 கிலோமீட்டர் தூரம் வரை ரோடு ஷோ சென்றார். அவருக்கு வழிநெடுகிலும் தி.மு.க.வினர் மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

ரோடுஷோவின் நடுவே வாகனத்தில் இருந்து கீழே இறங்கிய மு.க.ஸ்டாலின், அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் வாக்கு கேட்டார். தொண்டர்கள் வழங்கிய பரிசுகளையும் பெற்றுக்கொண்டார்.

அப்போது, தொண்டர்கள் கையில் வைத்திருந்த பலூன்களை மு.க.ஸ்டாலினை நோக்கி வீசியதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

**கடந்த 3 மாதங்களாக**

'ரோடு ஷோ' சென்றபோது வழியில் இறங்கிய மு.க.ஸ்டாலின் திடீரென வாகனத்தில் இருந்து கீழே இறங்கினார். பின்னர் அங்கிருந்த மளிகைக்கடைக்கு சென்றார். அவர், மளிகைக்கடைக்காரரிடம் விலைவாசி குறித்து கேட்டறிந்தார்.

அப்போது மு.க.ஸ்டாலின் கூறுகையில், 4 மாதங்களுக்கு முன்பு இருந்த விலையில் இருந்து அத்தியாவசிய பொருட்களின் விலை பெருமளவு உயர்ந்துள்ளது. அன்றாட சமையலுக்கு வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் விழி பிதுங்கி நிற்கின்றனர். 'ரீல்ஸ்' பார்த்தால் மக்களின் வயிறு நிறையுமா?. இந்தியா முழுவதும் ஜி.எஸ்.டி. வருவாய் உயர்ந்து வரும் நிலையில், கடந்த 3 மாதங்களாக தமிழ்நாடு சரிவை சந்தித்து வருகிறது என்றார்.

**எடப்பாடி பழனிசாமி**

தாராபுரம் தொகுதி அ.தி.மு.க வேட்பாளர் பானுமதிக்கு ஆதரவு திரட்டுவதற்காக கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று தீவிர பிரசாரம் செய்தார். இரவு 8 மணி அளவில் தாராபுரத்தில் உள்ள அ.தி.மு.க. தேர்தல் பணிமனை அலுலகத்தில் இருந்து வாகனத்தில் ரோடுஷோ சென்றார்.

உடுமலை சாலையில் இருந்து அலங்கியம் சாலை வழியாக தாராபுரம் நகர் முழுவதும் ரோடுஷோ சென்ற அவருக்கு வழி நெடுகிலும் காத்திருந்த தொண்டர்கள் பூக்கள் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும் ஒருசிலர் செல்பியும் எடுத்துக்கொண்டனர். தாராபுரம் அண்ணா சிலை அருகே ரோடுஷோ நிறைவடைந்தது. இதையடுத்து அங்கு பொதுக் கூட்டம் நடந்தது. இதில், எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பேசினார்.

# "தோல்வி பயத்தால் அதிக இடங்களில் முதல்வர் விஜய் பிரச்சாரம்" – நயினார் நாகேந்திரன்

திருநெல்வேலி, அக்.04-

"கடந்த சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் 8 அல்லது 9 இடங்களில்தான் நேரடியாக சென்று விஜய் பிரச்சாரம் செய்தார். ஆனால், தற்போதைய இடைத்தேர்தலில் ஒரே தொகுதியில் 39 இட ங்களுக்கு சென்றுள்ளார். அவருக்கு தோல்வி பயம் வந்துவிட்டது" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் இன்று செய்தியா ளர்களிடம் கூறியது: "மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு தொகுதிக ளுக்கும் சென்று வந்துள்ளேன். அங்கு நிலவும் அரசியல் சூழ்நிலை யைப் பார்க்கும்போது தமிழக வெற்றிக் கழகம் பின்தங்கிய நிலையில் உள்ளது.

முதல்வர் விஜய் மதுராந்தகம் தொகுதியில் ஏற்கெனவே பிரச்சாரம் செய்துள்ளார். தொகுதிக்கு உட்பட்ட பெரும்பாலான கிராமங்களுக்கும் சென்று வாக்கு சேகரித்துள்ளார். தாராபுரத்திலும் முதல்வர் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்.

கடந்த சட்டப்பேரவை



பொதுத் தேர்தலில் 8 அல்லது 9 இடங்களில்தான் நேரடியாக சென்று விஜய் பிரச்சாரம் செய்தார். ஆனால் தற்போதைய இடைத்தேர்தலில் ஒரே தொ குதியில் 39 இடங்களுக்கு சென்று ள்ளார். அவருக்கு தோல்வி பயம் வந்துவிட்டது. பிரச்சாரத்தில் மாற்றி மாற்றி பேசுகிறார். அவர் பேசுவது எதுவுமே புரியவில்லை. விவரமாக பேசினால் நன்றாக இருக்கும்.

இண்டியா கூட்டணியில் பல்வேறு காலகட்டங்களில் பல கட்சிகள் இடம்பெற்றும், சில கட்சிகள் விலகியும் உள்ளன. தற்போது உள்ள இண்டியா கூட்டணி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது எதிர்கா லத்தில்தான் தெரியவரும்.

தேர்தல் முடிவுகள் தங்களுக்கு சாதகமாக இருக்கும்போது தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளை ஏற்று க்கொள்வதும், தோல்வி யடைந்தால் தேர்தல் முறைகேடுகள் குறித்து கேள்வி எழுப்பு வதும் சரியான அணுகுமுறை அல்ல.

எஸ்ஐஆர் நடவடி க்கைகள் குறித்து பல்வேறு கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருவது தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சி.

சிறுவர்கள் மற்றும் குழந்தைகளை அரசியல் பிரச்சாரத்துக்கு பயன்படு த்துவது தவிர்க்கப்பட வேண்டும். சமூக வலைதளங்கள் அரசியல் பிரச்சாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

சமூக வலைதளங்களில் ஒரு தகவலை திரும்பத் திரும்ப கூறுவதன் மூலம் அது உண்மையாகிவிடாது. பொய்யான தகவல்கள் சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு, போதைப்பொருள் பயன்பாடு, மின்வெட்டு, தொழில் முதலீடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. தொழில் வளர்ச்சிக்கு தேவையான மின்சாரம், தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் புதிய தொழில் முதலீடுகள் வேறு மாநிலங்களுக்கு செல்லும் சூழல் ஏற்படும்.

தமிழகத்தின் ஜிஎஸ்டி வசூல் வளர்ச்சி விகிதம் குறைந்து வருகிறது. இதனால் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படும்.

தமிழகத்தில் உள்ள கோயில்களை வெவ்வேறு வகைகளாக பிரித்துப் பார்ப்பது தேவையற்றது. ஒவ்வொரு கோயிலுக்கும் தனித்தனி ஆகம மற்றும் பாரம்பரிய நடைமு றைகள் உள்ளன. கோயில் தொடர்பான விவகாரங்களை அரசியல் பிரிவினைக்கு பயன்படு த்தக் கூடாது.

தமிழகத்தில் இடைத்தேர்தலுக்கு பின்னர் அடுத்தடுத்த அரசியல் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த எம்எல்ஏக்கள் எதிர்காலத்தில் வேறு அரசியல் முடிவுகளை எடுப்பார்களா என்பது எனக்கு தெரியாது" என்றார்.

# பிரச்சாரம் செய்யாமலேயே நாம் தேர்தல் களத்தில் நிற்க வேண்டும்: 'வீ த லீடர்ஸ்' நிறுவனர் அண்ணாமலை கருத்து

சென்னை, அக்.04-

சென்னை: 'உள்ளாட்சி, சட்டப்பேரவைத் தேர்தல்களில் அதிகளவில் பெண்களை போட்டியிட வைக்க வேண்டும். பிரச்சாரம் செய்யாமலேயே தேர்தல் களத்தில் நிற்க வேண்டும் என', 'வீ த லீடர்ஸ்' அமைப்பின் நிறுவனர் அண்ணாமலை தெரிவித்தார்.

'வீ த லீடர்ஸ்' அமைப்பின் சார்பில் அக்டோபர் மாதம் முழுவதும் 'மகளிர் அதிகாரமளிப்பு மற்றும் பாதுகாப்பு மாதம்' கடை பிடிக்கப்படுகிறது. இதன் தொடக்க நிகழ்ச்சியாக, காமராஜர் நினைவுஇன்றுமுன்னிட்டு, பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களுக்கு 'காமராஜர் விருது' வழங்கும் விழா சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் நேற்று நடந்தது.

இதில், அமைப்பின் நிறுவனர் அண்ணாமலை பங்கேற்று, ஆசிரியர் பணி, இயற்கை விவசாயம், பாரம்பரிய கிராமிய இசை, யோகா, கல்வி, தன்னார்வத் தொண்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும், அதிகம் அறியப்படாத 11 சாதனைப் பெண்களுக்கு காமராஜர் விருதுகளை வழங்கிக் கவுரவித்தார்.

அதைத் தொடர்ந்து அண்ணாமலை பேசிய




தாவது: தமிழகத்தில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், பெண்களுக்கு எதிரான பாலியல் தொந்தரவுகள், கடத்தல் உள்ளிட்ட வழக்கு களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளன.

அடுத்து நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தல், சட்டப் பேரவைத் தேர்தல் ஆகியவற்றில் நமது இயக்கத்தின் சார்பில் அதிகளவில் பெண்களைப் போட்டியிட வைக்க வேண்டும்.

இந்த இயக்கத்தில் இதுவரை 21 லட்சம் பேர் இணைந்துள்ளனர். எதிர்பார்த்ததைவிட அதிக வேகத்தில் நமது இலக்கை நோக்கிப்பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழக அரசியலில் மாற்றம் ஏற்படத் தொடங்கி விட்டது. இன்னும் பல மாற்ற ங்களைக் கொண்டுவரப் போகிறோம். தற்போது நடைபெறும் சட்டப்பேரவை இடைத்தே ர்தலில் அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களுக்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், நாம் ஓர் அரசியல் அமைப்பாக மாறும்போது, பிரச்சாரம் செய்யாமலேயே தேர்தல் களத்தில் நிற்க வேண்டும். தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் செய்வதற்கான அவசியமே இல்லாத அரசியலை உருவாக்க வேண்டும்.

வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு, பிரச்சாரத்தின் கடைசி நாளில் மட்டும் மக்களைச் சந்திக்கும் நிலையை உருவாக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கித்தான் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த விழாவில், 'வீ த லீடர்ஸ்' அமைப்பு பொதுச் செயலாளர் கரு. நாகராஜன், ஊடகம், பிரச்சாரம், மக்கள் தொடர்பு பொதுச் செயலாளர் அஸ்பயர் கே.சுவாமிநாதன், நிர்வாகிகள் சாய் சத்யன், மனோகரன், சுமதி வெங்கடேசன், அமர்பிரசாத் ரெட்டி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



## திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் கேடயங்கள் வழங்கி கௌரவிப்பு




திருப்பத்தூர், அக்.04-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூரில் திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை சார்பில் ஊக்கத்தொகை மற்றும் கேடயமும் வழங்கும் விழா திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளையின் தலைவர் ஏலகிரி வி.செல்வம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் Dr. A.கலியமூர்த்தி மற்றும் துணைத் தலைவர், விஐடி - பல்கலைக்கழகம், வேலூர். Dr. G.V. செல்வம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஊக்கத்தொகை கேடயம் சான்றிதழ்கள் வழங்கி அவர்களின் எதிர்கால கல்வி மற்றும் வளர்ச்சிக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



மேலும் இந்நிகழ்ச்சியில் திரைப்பட பிரபலங்கள் பங்கு பெற்ற லக்ஷ்மன் ஸ்ருதி இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளையின் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் முக்கிய பிரமுகர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## கோயில் கும்பாபிஷேகம் போன்ற நிகழ்வுகளில் சாதிய ரீதியாக அரசியல் செய்பவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை, அக்.04-

கோயில் கும்பாபிஷேகம் போன்ற நிகழ்வுகளில் சாதிய ரீதியாக அரசியல் செய்ய முற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறநிலையத் துறைக்கும், போலீஸாருக்கும் உயர் நீதிமன்ற நீதிபதி வி. லட்சுமி நாராயணன் உத்தரவிட்டுள்ளார்.

அரியலூரைச் சேர்ந்த மகேந்திரன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "பெரம்பலூரில் உள்ள மதுரகாளி அம்மன் பொது அறக்கட்டளை நிர்வாகம் தரப்பில் மதுர காளியம்மன் கோயில், கருப்பண்ண சாமி, பெரியசாமி மற்றும் பரிவார தேவதை கோயில்களுக்கான கும்பாபிஷேகம் அக்.25-ம் தேதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக கடந்த 2018-ம்

ஆண்டு தொடங்கிய திருப்பணி தற்போது நிறைவடையும் தருவாயில் உள்ளது. இந்நிலையில் கும்பாபிஷேக பணிகளை பொது அறக்கட்டளை நிர்வாகமே நடத்தும் வகையில் பெரம்பலூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே பிற சமுதாயத்தினரின் இடையூறு ஏதுமின்றி கும்பாபிஷேகத்தை நடத்த போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தார். இந்த மனு நீதிபதி வி. லட்சுமி நாராயணன் முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது, அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், அந்தக் கோயில் கடந்த 1976-ம் ஆண்டு முதல் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றார். அப்போது மனுதாரர் தரப்பில், கோயில் கும்பாபிஷேகத்தில் சாதி, மதம் மற்றும் நிறத்தின் அடிப்படையில் பங்கேற்கக்கூடாது என யாரும் தடுக்கப்படமாட்டார்கள். பட்டியலின வகுப்பினரும் கும்பாபிஷேகத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நீதிபதி, மனுதாரர் கோயில் மீது உரிமை கோரி இந்த வழக்கைத் தொடரவில்லை. மாறாக கோயிலை புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்துகிறோம், பாதுகாப்பு கொடுங்கள் எனக்கூறித்தான் வழக்கு தொடர்ந்துள்ளார்.

எனவே கும்பாபிஷேக நிகழ்வின்போது சாதி, மதம் மற்றும் நிறத்தின் அடிப்படையில் எவ்வித பாகுபாடும் காட்டப்படவில்லை என்பதையும், கும்பாபிஷேக நிகழ்வில் யாரும் தடுக்கப்படவில்லை என்பதையும் இந்து சமய அறநிலையத்துறை உறுதி செய்ய வேண்டும்.

மனுதாரர் சார்ந்துள்ள அறக்கட்டளை நிர்வாகம் தவிர்த்து பிற சமூகத்தைச் சேர்ந்த நபர்கள் விழாவில் பங்கேற்க விடாமல் தடுக்கப்பட்டால் போலீஸார்

அத்தகைய விஷமத்தனமான செயல்பாடுகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

கும்பாபிஷேகம் போன்ற நிகழ்வுகளில் சாதிய ரீதியாக அரசியல் செய்ய முற்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்துள்ளார்.

## "விடுபட்ட வாக்காளர்களுக்கு 'படிவம் 6' வாய்ப்பை மறைத்தது ஏன்?" - ப.சிதம்பரம் கேள்வி

புது டெல்லி, அக்.04-

மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆர் பணியின்போது வாக்காளர்கள் நீக்கப்பட்ட நடைமுறை குறித்து மூத்த காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ப. சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன், விடுபட்டவர்களை மீண்டும் சேர்ப்பதற்கான நிதிச் செலவுகள் மற்றும் பொறுப்புக்கூறல் குறித்தும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ப.சிதம்பரம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "எஸ்ஐஆர் நடவடிக்கையின் போது விடுபட்ட வாக்காளர்கள் 'படிவம் 6'-ஐ பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் எளிதாக மறுபதிவு செய்ய முடியும் என்றால், மேற்கு வங்கத்தின் எஸ்ஐஆர் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டபோது இந்த விஷயம் ஏன் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை? முறையான நடைமுறைகளைப் பின்பற்றாமல் மேற்கு வங்கத்தில் லட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. மேல்முறையீடுகளை விசாரிக்கத் தீர்ப்பாயங்களை அமைக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது; அதன்படி லட்சக்கணக்கான மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன.

நீதிபதிகள் ஆறு மாத காலம் கடுமையாக உழைத்து, சுமார் 1,26,000 மேல்முறையீடுகள் மீதான நடவடிக்கைகளை முடித்தனர். இதில் 91 முதல் 93 சதவீத மேல்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வாக்காளர் பட்டியலில் பெயர்கள் மீண்டும் சேர்க்கப்பட்டன. இவையெல்லாம் வீணான முயற்சியா?

'படிவம் 6'-ஐ சமர்ப்பிப்பதன் மூலம் எளிதாக மறுபதிவு செய்ய முடியும் என்றால், மேற்கு வங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அந்த நடவடிக்கைகள் அனைத்தும் நேரத்தையும் பணத்தையும் வீணடித்த செயலாகவே தோன்றுகிறது.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அரசமரத் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேச பெருமாள் கோயிலில், புரட்டாசி மூன்றாவது சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதையொட்டி, ஸ்ரீ வெங்கடேச பெருமாள் சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

## திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சிறப்பு பொதுப்பேரவை



திருப்பத்தூர், அக்.04-

திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் சிறப்பு பொதுப்பேரவைக் கூட்டம் 16.10.2026 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு திருமண மண்டப வளாகத்தில் நடைபெறுகிறது.

தகுதியற்ற உறுப்பினர்களை நீக்குதல், தகுதியான உறுப்பினர்களை உள்ளடக்கிய உறுப்பினர் பட்டியல் தயாரித்தல் உள்ளிட்ட பொருள்கள் பரிசீலிக்கப்பட உள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆலையின் அங்கத்தினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் கேட்டுக்கொண்டுள்ளார். அனைவரும் தங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி கூட்டத்தை சிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

## "தவெக வேட்பாளரை உருவக்கேலி செய்வதா?" – ஸ்டாலினுக்கு முதல்வர் விஜய் கண்டனம்

சென்னை, அக்.04-

"தாராபுரம் தொகுதி வேட்பாளரான சகோதரி சத்தியபாமா குறித்து, உருவக் கேலி செய்து, மிகவும் அநாகரிகமாகப் பேசிப் புளகாங்கிதம் அடைந்துள்ளார் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின். தொடர்ந்து பெண்களை ஆபாசமாகப் பேசி வரும் திமுகவுக்கு தமிழகப் பெண்களின் மகனாக, அண்ணனாக, தம்பியாக எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என தவெக தலைவரும், முதல்வருமான விஜய் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டம் என்ற பெயரில், தீய சக்தியான திமுக சார்பில் ஓர் அவதூறு மற்றும் அநாகரிகக் கூட்டத்தை நடத்தியுள்ளார், அதன் தலைவர் மு.க.ஸ்டாலின். நமது தாராபுரம் தொகுதி வேட்பாளரான சகோதரி சத்தியபாமா குறித்து, உருவ கேலி செய்து, மிகவும் அநாகரிகமாகப் பேசிப் புளகாங்கிதம் அடைந்துள்ளார். திமுக சார்பாக வளர்க்கப்பட்டு வரும் ஆபாசநதியை, வன்மநதியை, வக்கிரநதியை உருவாக்கியதே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய தான்தான் என்பதைப் பெருமையுடன் மார்தட்டி மகிழ்வுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

ஜனநாயகத்திற்கு விரோதமானவர்கள் திமுகவினர். ஆபாசமும் வன்மமும் வக்கிரமும் திமுகவின் மூலக்கூறிலும் மூளைக்கூறிலும் கலந்திருப்பதைத் தமிழக மக்கள் அனைவரும் காலங்காலமாக உணர்ந்தே வைத்திருக்கின்றனர். பெண்களைப் பற்றி ஆபாசமாகப் பேசுவதில், அதிலும் பெண்களை அருகில் வைத்துக்கொண்டே, அவர்கள் அருவருப்பாக உணர்வதைக்கூட கண்டுகொள்ளாமல் பேசுவதில் வல்லவர்களான இந்தத் தீய சக்திக் கூட்டத்திற்குத் தமிழக மக்களும் தாராபுரம் தொகுதி மக்களும் தக்க பதிலடியைக் கொடுக்கத்தான் போகின்றனர். தொடர்ந்து பெண்களை ஆபாசமாகப் பேசி வரும் தீய சக்தி திமுகவிற்குத் தமிழகப் பெண்களின் மகனாக, அண்ணனாக, தம்பியாக எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பணம் கொடுக்காமல் பட்டாசு வாங்கக் கூடாது போலீஸாருக்கு விருதுநகர் எஸ்பி எச்சரிக்கை

விருதுநகர், அக். 05-

விருதுநகர் மாவட்டத்தில் பணம் கொடுக்காமல் போலீஸார் பட்டாசு வாங்கக் கூடாது என எஸ்.பி. கவுதம் கோயல் எச்சரித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டாசு ஆலைகளும், 1,500-க்கும் மேற்பட்ட பட்டாசு கடைகளும் இயங்கி வருகின்றன. தீபாவளி சீசன் காலங்களில் போலீஸார் தங்கள் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பட்டாசு ஆலைகள் மற்றும் பட்டாசு கடைகளில் பணம் கொடுக்காமல் பட்டாசு வாங்குவது, கிப்ட் பாக்ஸ் வாங்குவது போன்ற செயல்களில் ஈடுபடுவதால் தொடர்ந்து புகார்கள் எழுந்தன.

இது தொடர்பாக விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கவுதம்கோயல் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விருதுநகர் மாவட்டத்தில் பணியாற்றும் காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் பட்டாசு ஆலைகள் மற்றும் பட்டாசு கடைகளில் பணம் கொடுக்காமல் பட்டாசுகள் மற்றும் கிப்ட் பாக்ஸ் வாங்கக் கூடாது என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## குன்றத்தூர் ஒன்றிய ஆதனூர் ஊராட்சியில் காந்தி ஜெயந்தி முன்னிட்டு கிராம சபை கூட்டம்




ஆதனூர், அக்.04-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றுக்கு உட்பட்ட ஆதனூர் ஊராட்சி அலுவலகத்தில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் ஒன்றிய கவுன்சிலர் மலர்விழி தமிழ் அமுதன், துணைத் தலைவர் ரவி, ஊராட்சி மன்ற செயலர் மற்றும் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள் ஆகியோர் கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டனர் கூட்டத்தில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள் சாலை குடிநீர், மின்விளக்கு, ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தனர். மேலும் கூட்டத்தில் கவிஞர் கண்ணதாசன் குடியிருப்பு நல சங்கம் சார்பில் அதன் தலைவர் முரளிதரன், பொருளாளர் நாராயணன், சங்க உறுப்பினர்கள் ஸ்ரீராம், லிங்க துரை, ஆகியோர் கலந்துகொண்டு ஒன்றிய கவுன்சிலர் தமிழ் அமுதன் அவர்களிடம் தங்கள் பகுதி கோரிக்கைகளை மனுவாக அளித்தனர் அதற்கு உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர்





## திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த தடகள வீரர் T. K.விஷாலை நேரில் சந்தித்த மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்

ஜோலார்பேட்டை, அக்.04-

ஜப்பானில் நடைபெற்ற 20-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில், இந்தியாவின் சார்பில் பங்கேற்று 2 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார் தமிழகத்தைச் சேர்ந்த தடகள வீரன் T.K. விஷால்.

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையைச் சேர்ந்த T.K. விஷால், 4×400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கமும், ஆண்கள் பிரிவு 4×400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கமும் வென்று இந்தியாவிற்கும், தமிழகத்திற்கும், திருப்பத்தூர் மாவட்ட ஜோலார்பேட்டைக்கும், பெருமை சேர்த்துள்ளார்.

இந்த மகத்தான சாதனையைப் பாராட்டி, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.நல்லசிவன் இ.ஆ.ப., ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.சி.வீரமணி மற்றும் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஜெயக்குமாரின் நேரில் விஷாலின் இல்லத்திற்குச் சென்று, அவருக்குச் சால்வை அணிவித்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர்கள்.

மேலும், திருப்பத்தூர் மாவட்ட தடகள சங்க தலைவர் சீனிவாசன், பொருளாளர் முனைவர் இயேசுராஜ், சுகுணா மற்றும் விஷாலின் தாத்தா பாட்டியான கே.சி.காமராஜ் சுஜாதா, தாய் கயல்விழி,, குடும்பத்தினர் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் என பலரும் நேரில் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துகளைப் பகிர்ந்துகொண்டனர்.

## இருமொழிக் கொள்கைக்கு எதிராக அதிகாரிகள் செயல்பட்டால் கடும் நடவடிக்கை: தமிழக அரசு எச்சரிக்கை

தூத்துக்குடி, அக்.04-

இருமொழிக் கொள்கைக்கு எதிராக செயல்படும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக அரசு எச்சரித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் இருந்து நாசரேத் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் (எஸ்எச்-93) இரு தினங்களுக்கு முன்பு புதிய வழிகாட்டி பலகை அமைக்கப்பட்டது.

இதில், திருநெல்வேலி, ஆழ்வார்திருநகரி, தூத்துக்குடி, திருச்செந்தூர் ஆகிய ஊர்களுக்கு எத்தனை கிலோ மீட்டர், எந்த திசையில் செல்ல வேண்டும் என்பதை குறிக்கும் வகையில் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன.

முதலில் தமிழ் மொழியிலும், அடுத்ததாக இந்தி மொழியிலும், மூன்றாவதாக ஆங்கில மொழியிலும் ஊர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. வழிகாட்டு பலகையில் இந்தி மொழி இடம் பெற்றிருந்தது பெரும் சர்ச்சையை கிளப்பியது.

இந்த வழிகாட்டி பலகை சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவியது. திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், பாமக தலைவர் அன்புமணி உள்ளிட்ட தலைவர்களும் தமிழ் ஆர்வலர்களும் கண்டனம் தெரிவித்தனர்.

இதையடுத்து, அந்த வழி காட்டு பலகையில் இருந்த இந்தி பெயர்கள் நேற்று முன்தினம் இரவில் அவசர, அவசரமாக ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட்டன.

இதுதொடர்பாக, மாநில நெடுஞ்சாலைத்துறை உதவிக் கோட்ட பொறியாளர் பூமிநாதன், உதவிப் பொறியாளர் முத்துலட்சுமி ஆகியோர் உடனடியாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக, தமிழக அரசு சார்பில் வெளியிட்ட அறிக்கை: சாத்தான்குளம் - நாசரேத் மாநில நெடுஞ்சாலையில் (எஸ்எச்-93) புதிதாக வைக்கப்பட்ட வழிகாட்டிப் பலகையில் தமிழ் மற்றும் ஆங்கிலத்துடன், இந்தி மொழியிலும் ஊர்ப் பெயர்கள் எழுதப்பட்டிருந்தது தெரிய வந்தவுடன் இந்தி எழுத்துகள் உடனடியாக நீக்கப்பட்டன.

தமிழக அரசின் இருமொழிக் கொள்கைக்கு எதிராக மாநில நெடுஞ்சாலைத் துறையின் வழிகாட்டிப் பலகையில் இந்தி இடம் பெற காரணமாக இருந்த நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்ட பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

துறைரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் இருமொழிக் கொள்கைக்கு எதிராக செயல்படும் அரசு அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# மதுரையில் தூய்மை பணிகள்: மாநகராட்சி ஆணையாளர் ஆய்வு



மதுரை, அக்.04-

மதுரை மாநகராட்சியின் மண்டலம் 2 மற்றும் மண்டலம் 3 பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மை பணிகளை மாநகராட்சி ஆணையாளர் கவுரவ் குமார், இ.ஆ.ப., இன்று (3-ந்தேதி) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மண்டலம் 2, வார்டு 64-க்கு உட்பட்ட பெத்தானியாபுரம் ராஜாங்கம் வீதியில் ஆய்வு மேற்கொண்ட அவர், அப்பகுதியில் நடைபெற்று வரும் தூய்மை பணிகள் குறித்து பொது மக்களிடம் கேட்டறிந்தார். அங்குள்ள வாய்க்காலில் கொட்டப்பட்டிருந்த குப்பைகளை உடனடியாக அகற்றுமாறு பணியாளர்களுக்கு உத்தர விட்டார். மேலும், மாநகராட்சி சார்பில் குப்பைகளை சேகரிக்க வரும் வாக னங்களிடம் மட்டுமே பொது மக்கள் குப்பைகளை வழங்க வேண்டும் என்றும், குப்பைகளை நான்கு வகைகளாக பிரித்து வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மண்டலம் 3, வார்டு 58-க்கு உட்பட்ட ஆரப்பாளையம் பகுதியில் உள்ள கடைகளை ஆணையாளர் ஆய்வு செய்தார். பொது மக்களுக்கு இடையூறாக அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள கடைகளை உடனடியாக அகற்றுமாறு உத்தரவிட்டார். மேலும், கடைகளில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் காலாவதி நிலையை பணியாளர்கள் அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் பொதுக்கழிப்பிடத்தையும் பார்வையிட்ட ஆணையாளர், கழிப்பிடத்தை அவ்வப்போது சுத்தம் செய்து தூய்மையாக பராமரிக்க வேண்டும் என பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது உதவி ஆணையாளர் மணிமாறன், நகர திட்டமிடுநர் முரளி, உதவி செயற்பொறியாளர்கள் ஆரோக்கிய சேவியர், முத்து, சுகாதார அலுவலர் ராஜ்கண்ணன் உள்ளிட்ட மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.




# திண்டுக்கல்லில் அக்ரி ஸ்டார்ட் அப் திருவிழா 3.0! விவசாயத்தை தொழிலாக்கும் புதிய வாய்ப்புகள் குறித்து கருத்தரங்கு

மதுரை, அக்.04-

சத்குருவின் மண் காப்போம் இயக்கம் மற்றும் ஜி.டி.என். கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்தும் 'அக்ரி ஸ்டார்ட் அப் திருவிழா 3.0' வேளாண் புத்தாக்கத் தொழில்கள் தொடர்பான கருத்தரங்கு திண்டுக்கல்லில் உள்ள ஜி.டி.என். கலைக் கல்லூரியில் வரும் அக்டோபர் 4-ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுதொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு மதுரையில் நடைபெற்றது. இதில் மண் காப்போம் இயக்க ஒருங்கிணைப்பாளர் சுவாமி ஸ்ரீமுகா கலந்து கொண்டு கருத்தரங்கு குறித்து விளக்கினார்.

'விவசாயத்தைத் தொழிலாக்கி, தொழிலை அடையாளமாக்க' என்ற கருப்பொருளில் நடைபெறும் இக்கருத்தரங்கில், விவசாயத்தில் விளைபொ ருட்களை உற்பத்தி செய்வதுடன் நின்றுவிடாமல், அவற்றை மதிப்புக்கூட்டி, பிராண்டிங் செய்து, சந்தைப்படுத்தி வெற்றிகரமான தொழிலாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து வழிகாட்டப்பட உள்ளது.

விளைபொருள் உற்பத்தி முதல் மதிப்புக்கூட்டல், பிராண்டிங், தொழில்நுட்ப பயன்பாடு, சந்தைப்படுத்தல் மற்றும் டிஜிட்டல், சமூக ஊடகங்கள் மூலம் வாடிக்கையாளர்களை சென்றடைவது வரையிலான பல்வேறு அம்சங்கள் குறித்து ஒரே இடத்தில் வழிகாட்டும் வகையில் கருத்தரங்கு திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், வேளாண் மற்றும் உணவுப்பொருட்கள் சார்ந்த தொழில்முனைவோர், வேளாண் தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் இந்நிகழ்வு பயனுள்ளதாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்க உள்ள இந்நிகழ்வில், 100-க்கும் மேற்பட்ட வேளாண் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. மேலும், பங்கேற்பாளர்களுக்கு முழுமையான வழிகாட்டுதல்களை வழங்கும் வகையில் 4 முக்கியப் பிரிவுகளைச் சேர்ந்த நிபுணர்கள் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமந்தமலை கிராமத்தில், அண்ணல் காந்தியடிகளின் 158-வது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக, குழந்தை திருமணத்திற்கு எதிரான உறுதிமொழியை, மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நேற்று (02.10.2026) பொதுமக்கள், தன்னார்வலர்கள் எடுத்துக்கொண்டனர். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் உமாமகேஸ்வரி, மகளிர் திட்ட இயக்குநர் சுசீலா ராணி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) தமிழ்செல்வன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அலுவலர் சக்தி சுபாஷினி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பொதுமக்கள் உள்ளனர்.





# தாராபுரம் இடைத்தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் பங்கேற்பு

மு.க.ஸ்டாலின் உரையாற்றிய பொதுக்கூட்டத்தில், கூட்டணி வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யாவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான மதியழகன்,மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், முன்னாள் நகர செயலாளர் நவாப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



# பாண்டுரங்கர்ருக்மணிதேவி சிறப்பு அலங்காரம்

கிருஷ்ணகிரி, அக்.04-

கிருஷ்ணகிரி அருகே உள்ள அக்ரஹாரம் கிராமத்தில் அமைந்துள்ள பாண்டுரங்கர் ஆலயத்தில், 3-வது சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

இதையொட்டி பாண்டுரங்கர் ருக்மணிதேவிக்கு பெருமாள் அலங்காரம் செய்யப்பட்டு, பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

ஆலயத்தில் பக்தி பாடல்கள் மற்றும் சிறப்பு வழிபாடுகளுடன் விழா சிறப்பாக நடைபெற்றது.





# திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி பொன்னாபுரம் ஊராட்சி பூத் எண்கள் 53, 54, 55-ல் தீவிர வாக்கு சேகரிப்பு

கிருஷ்ணகிரி, அக்.04-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தலைமையில், வாவிபாளையம், கள்ளிப்பாளையம், தாசர்பட்டி, கருங்காலிவலசு, நாட்டுக்கல்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி, தாராபுரம் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யா அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் சுகவனம், EX.MP., வெற்றிச்செல்வன், EX-.MP., மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி, மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன், முன்னாள் நகர செயலாளர் நவாப், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் கோவிந்தசாமி, ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமை திருவிழா

மாதவரம், அக்.04-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி செங்குன்றம் சோத்துபாக்கம் கிராமம் ஸ்ரீ ஜெயதுர்கா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமை திருவிழா ஆலய நிர்வாகிகள் சுரேஷ், ரஜினி, பிரபு, லதாபிரபு, சரவணன், பாலாஜி, பாபு ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் மூலவர் பஞ்சமுக ஆஞ்சநேயருக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து பின்னர் வெண்ணைய் காப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாரதனை காண்பிக்கப்பட்டது. அதேபோல் உற்சவர்கள் ஸ்ரீசீதா-ஸ்ரீராமசந்திரன் மற்றும் பூதேவி, ஸ்ரீதேவி பெருமாள் உற்சவர்களுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தூப தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.




# தமிழ்நாடு பத்திரம் நகல் எழுதுவோர் சங்கம் சார்பில் மாநில செயற்குழு நிர்வாகக் குழு கூட்டம்

மதுரை, அக்.04-

மதுரையில் தமிழ்நாடு பத்திரம் நகல் எழுதுவோர் சங்கம் மாநில செயற்குழு, நிர்வாகக் குழு கூட்டம் ஒருங்கிணைப்பு விழா நடைபெற்றது. இதில் பொள்ளாச்சி கே. சி. நாகேஸ்வரி நினைவு அரங்கம் ராமநாதபுரம் ராமநாதன் அவர்களால் திறக்கப்பட்டது. மாநில ஆலோசகர் திண்டுக்கல் பதிவு மாவட்ட தலைவர் சுப்பிரமணியன் (எ) சாமி கொடியேற்றி துவக்கி வைத்தார். கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் திருப்பூர் ஆவண எழுத்தர் நவநீதிய இயக்குனர் பத்மநாபன் தலைமை தாங்கினார். மதுரை தெற்கு மற்றும் வடக்கு பதிவு மாவட்ட தலைவர் உ. ராஜமாணிக்கம் முன்னிலை வகித்தார். மதுரை பதிவு மாவட்ட செயலாளர் வாசுதேவன், மதுரை ஆவண எழுத்தர் நவநீதிய இயக்குனர் கண்ணன், ராமநாதபுரம் ஆவண எழுத்தர் நவநீதிய இயக்குனர் முத்துக்குமார், ராமநாதபுரம் மாநில செயல் தலைவர் முருகேசன், அலங்காநல்லூர் ரங்கநாதன் உட்பட பலர் சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் முக்கிய தீர்மானங்களாக ஆவண எழுத்தர் கூலி உயர்த்துதல் (2012ல் நிர்ணயிக்கப்பட்ட பின் உயர்த்தப்படவில்லை) , ஆவண எழுத்தர் நிரந்தர உரிமம், ஆவண எழுத்தர் நல நிதியம் மருத்துவ காப்பீடு, ஆவண எழுத்தர் தேர்வு விரைவில் நடத்திட 1996 க்கு பின் தேர்வு நடைபெறாததால் 2022 முதல் கோரிக்கை. நகல் எழுத்தாளர்களுக்கு தேர் இல்லாமல் ஆவண எழுத்தர் உரிமம் வழங்குதல் 2009 முதல் அவர்கள் பணி முழுமையாக இல்லாமையால் உதவியாளர்களாக பணிபுரிகிறார்கள். வழக்கறிஞர் கடவு அனுமதிக்கும் பொழுது வழக்கறிஞர் சங்கத்தில் சரிபார்த்தல் நிலை உள்ளது. ஆனால் வழக்கறிஞர் மீது ஒழுங்கு நடவடிக்கை இளைக்கால தடை நிரந்தர தடை பின்னர் ஏற்படின் அதை சரி பார்க்கும் வசதி இல்லை சார் பதிவாளர் ஒவ்வொரு ஆவணத்திற்கும் சரி பார்க்க இயலாத நிலை முறைப்படுத்துதல், நில மோசடி வழக்கு தொடர்பான ஆவணங்களை தயாரித்ததாக கையொப்பமிட்டவர்கள் பெரும் பகுதி வழக்கறிஞர்கள் இதனை தவிர்க்கும் பொருட்டு வழக்கறிஞர்கள் துறையில் அனுமதிபெறுவது போன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



# பி.எஸ்.என்.எல். 26-வதுநிறுவன தினம்: மதுரையில் விழிப்புணர்வு நடைபயணம்

மதுரை, அக்.04-

பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட் (பி.எஸ்.என்.எல்.) மதுரை வணிகப் பகுதியின் 26-வது நிறுவன தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி பி.எஸ்.என்.எல். ஊழியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு நடைபயணம் மற்றும் பேரணி நடைபெற்றது.

மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மதுரை வணிகப் பகுதி சார்பில் நடைபெற்ற இந்த நடைபயணத்தில் சுமார் 60 ஊழியர்கள் கலந்து கொண்டனர். பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் மொபைல் மற்றும் எப்.டி.டி.எச். (FTTH) சேவைகள் குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடி ஊழியர்கள் நடைபயணம் மேற்கொண்டனர். தல்லாகுளம் பி.எஸ்.என்.எல். அலுவலகத்தில் இருந்து தொடங்கிய நடைபயணத்தை, மதுரை பி.எஸ்.என்.எல். முதன்மை பொது மேலாளர் பி. லோகநாதன், ஐ.டி.எஸ்., கொடியசைத்து தொடங்கி வைத்தார். காந்தி அருங்காட்சியகம், ராஜா முத்தையா மன்றம், தல்லாகுளம் பெருமாள் கோவில் உள்ளிட்ட முக்கிய பகுதிகள் வழியாக நடை பயணம் நடைபெற்றது. வழியெங்கும் பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு பி.எஸ்.என்.எல். சேவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஊழியர்கள் சிறு நாடகமும் நடத்தினர். பின்னர் தல்லாகுளம் பி.எஸ்.என்.எல். அலுவலக வளாகத்தில் உள்ள சி.டி.ஓ. வளாகத்தில் நடைபயணம் நிறைவடைந்தது.

நிறுவன தினத்தையொட்டி பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஓவியம் மற்றும் வினாடி-வினா போட்டிகளும் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா முதன்மை பொது மேலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் முதன்மை பொது மேலாளர் பி. லோகநாதன், ஐ.டி.எஸ்., கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.



# ஏரலில் இரவில் தூங்கிய மருத்துவரை எழுப்பி கேள்வி கேட்ட தவெக எம்எல்ஏ

தூத்துக்குடி, அக்.04–

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், நள்ளிரவில் தூங்கிய மருத்துவரை எழுப்பி, ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏ சரவணன் கேள்வி கேட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏரல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எம்எல்ஏ கு.சரவணன் நேற்று முன்தினம் நள்ளிரவில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, ஒரு அறையில் மருத்துவர் ஒருவர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

அங்கிருந்த செவிலியர், தொலைபேசி மூலம் மருத்துவரை தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்துள்ளார்.

வெளியே வந்த மருத்துவரிடம், 'இரவு நேரத்தில் பொதுமக்கள் அவசர சிகிச்சைக்காக வரும்போது, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பணியில் இல்லாவிட்டால், அவர்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்க முடியும்?" என எம்எல்ஏ சரவணன் கேள்வி எழுப்பினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டார்.

இதுகுறித்து, அரசு மருத்துவர்கள் தரப்பில் கூறும்போது, "நோயாளிகள் இல்லாத நேரத்தில் மருத்துவர்கள் ஓய்வு எடுக்க அனுமதி உள்ளது. அரசின் நடைமுறையை அறியாமல் எம்எல்ஏ வீண்பழி சுமத்துகிறார்" என்றனர்.

# "பொதுவெளியில் ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டும்" – அமைச்சர் நிர்மல் குமார்




கோவை, அக்.04–

"ஓட்டுக்கு பணம் கொடுத்ததாக தவறான தகவலின் அடிப்படையில், மார்க்சிஸ்ட் மாநிலச் செயலர் பெ.சண்முகம் பேசியுள்ளார்" என கோவையில் அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார். மேலும், "பொதுவெளியில் ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.

தமிழக மின்சாரம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் நிர்மல் குமார் சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று (அக்.3) கோவை வந்தார். கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "தாராபுரத்தில் நடந்த பிரச்சாரத்தில் பங்கேற்று பேசிய திமுக தலைவர் ஸ்டாலின், தன் உண்மையான முகத்தை வெளிப்படுத்தியுள்ளார். தந்தையும், மகனும் தங்களது வக்கிரத்தை, உண்மையான முகத்தை பிரச்சாரத்தில் வெளிப்படுத்துகின்றனர்.

இனிமேல் அவர்களுக்கு தோல்வி மட்டும்தான். வெற்றியே கிடையாது. இந்த வயதிலும் ஒரு பட்டியலின பெண்ணைப் பற்றி மோசமாகப் பேசியுள்ளார். திமுகவினர் சமுதாயத்துக்கு கேடு விளைவிப்பவர்கள். சமுதாயத்தில் இருந்தே விரட்டியடிக்கப்பட வேண்டியவர்கள். திமுகவின் அத்தியாயம் இத்துடன் முடிந்து விட்டது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் அதிமுக தற்போது எந்நிலையில் உள்ளதோ, அதே நிலைமை தான் திமுகவுக்கும் ஏற்படும். பொதுவெளியில் ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டும்.

எந்த நிலையிலும் நாங்கள் ஓட்டுக்காக ஒரு ரூபாய் கூட கொடுப்பதில்லை. திமுகவிடம் இருந்து தவறான தகவல் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு சென்றுள்ளது. அதை வைத்து மார்க்சிஸ்ட் மாநில செயலர் பெ.சண்முகம் பேசுகிறார். அதுபோன்ற ஒன்று நடந்தது என்று அவர்கள் நிரூபிக்கட்டும்.

எஸ்ஐஆருக்கு எதிராக தமிழகம் முழுவதும் போராட்டம் செய்த ஒரே கட்சி தவெகதான். எஸ்.ஐ.ஆர் பணி சரியான முறையில் நடந்திருந்தால் இந்நேரம் 160 தொகுதிகளில் கூட வெற்றி பெற்று இருப்போம்.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் அனைத்து தேர்தல்களிலும் திமுக தோல்வியை மட்டுமே தழுவும். இந்த இடைத்தேர்தலில் திமுக, அதிமுக வேட்பாளர்கள் டெபாசிட் வாங்குவதே மிகவும் கடினம்.

இடைத்தேர்தலில் நிச்சயமாக நாங்கள் வெற்றி பெறுவோம். தற்போது உள்ள அதிமுக, எடப்பாடி பழனிசாமியின் அதிமுக. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா கட்சியை இன்று முட்டுச்சந்துக்கு கொண்டு போய் நிறுத்திவிட்டார்.

அடுத்த தேர்தலில் திமுக, அதிமுக, பாஜக ஆகிய மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்து தேர்தலை சந்திக்கப் போகிறார்கள். இதில் மாற்றுக் கருத்து கிடையாது.

நெய்வேலியில் இருந்து மத்தியத் தொகுப்புக்கு வரும் மின்சாரம் திடீரென நிறுத்தப்பட்டது. அதனால் தற்காப்புக்காக ஜெனரேட்டரைப் பயன்படுத்துமாறு தான் கூறியிருக்கிறோம். தொழில் துறையினருக்கு எந்த ஒரு மின்சாரத் தடையும் நாங்கள் செய்யவில்லை. சில மாதங்களில் லாங் டெர்ம் பர்சேஸ் டெண்டர் விடப்படும்" என்று அவர் கூறினார்.



# பயிர்க்கடன் தள்ளுபடி பணி: மண்டல இணை பதிவாளர் ஆய்வு

திருவள்ளூர், அக்.04–

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஒன்றியம் ஒதப்பை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் பா.ஜெயஸ்ரீ ஆய்வு செய்தார். அப்போது பயிர்க்கடன் தள்ளுபடி பணிகளின் முன்னேற்றம், அனைத்து வகையான கடன் வழங்கலின் முன்னேற்றம், புதிய உறுப்பினர் சேர்க்கை, தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள், அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கான முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு நிர்வாக மற்றும் சங்க செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.

சங்கத்தின் சேவைகளை பொதுமக்கள் மற்றும் உறுப்பினர்கள் முழுமையாக பயன்படுத்திட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும் அரசின் வழிகாட்டுதலின்படி நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை காலவரையறைக்குள் நிறைவேற்றவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதையடுத்து மீன் வளர்ப்பு கடன் வழங்கப்பட்ட பயனாளியை நேரில் சந்தித்து, அவரது மீன் வளர்ப்பு நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடன் தொகையின் பயன்பாடு குறித்து கேட்டறிந்தார். ஆய்வின் போது திருவள்ளூர் சரக துணைப்பதிவாளர் (பொ) சி.அமுதா, சங்கத்தின் கள அலுவலர் சாந்தி, செயலாட்சியர் பூபாலன், செயலாளர் பூபதி இருந்தனர்.

# நிறைவு விழா: தேசிய கொடி ஏந்தி செல்லும் நீரு தண்டா



ஜப்பான், அக். 04–

ஜப்பானில் கடந்த மாதம் 19ம் தேதி தொடங்கிய 20வது ஆசிய விளையாட்டு போட்டிகள் நாளையுடன் நிறைவு பெறுகிறது. நாகோயாவில் உள்ள பலோமா மிசுஹோ ஸ்டேடியத்தில் இந்திய நேரப்படி இன்றுமாலை 3.30 மணிக்கு நிறைவு விழா நடைபெறுகிறது. இதில் கண்கவர் கலைநிகழ்ச்சிகள், வீரர்களின் அணிவகுப்பு உள்ளிட்டவை நடைபெறுகிறது. நிறைவு விழாவில் இந்திய தேசியக்கொடியை துப்பாக்கி சுடுதலில் 2 தங்கம் மற்றும் வெள்ளி என 3 பதக்கங்களை வென்ற நீரு தண்டா ஏந்திச்செல்கிறார். அவர் ஏற்கனவே இந்தியா திரும்பிவிட்ட நிலையில் மீண்டும் ஜப்பானுக்கு புறப்பட்டுச்சென்றார்.

அடுத்ததாக 21வது ஆசிய விளையாட்டு போட்டி கத்தார் நாட்டில் 2030ம் ஆண்டு நடைபெற உள்ளது. நிறைவு விழாவின் போது ஆசிய விளையாட்டு கூட்டமைப்பின் அதிகாரப்பூர்வ கொடி கத்தாரின் தலைநகரான தோஹா நகரத்திடம் ஒப்படைக்கப்படும்.

# அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தேர்தல் ஆணையத்தில் திமுக புகார்!



சென்னை, அக்.04–

எதிர்க்கட்சித தலைவா மீது பொய்யான, அவதூறான கருத்துகளையும், அனைவரும் முகம்சுழிக்கும் வகையிலும் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் புகார் அளித்துள்ளோம். சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரியைச் சந்தித்துப் புகார் மனு அளித்த பின் திமுக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ பேட்டி அளித்துள்ளார்.

# "தமிழகத்தில் பொருளாதார நெருக்கடிக்கு வாய்ப்பு" – கிருஷ்ணசாமி எச்சரிக்கை



சென்னை, அக்.04–

"தமிழகத்தில் மிகப் பெரிய அளவுக்குப் பணப்புழக்கம் குறைந்து, பொருளாதார நெருக்கடி ஏற்பட வாய்ப்பு உள்ளது" என புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "விஜய் அரசு பொறுப்பேற்று 5 மாதங்கள் நிறைவடைய உள்ளன. பூரண மதுவிலக்கு, ஊழலற்ற ஆட்சி போன்ற எண்ணற்ற வரக்குறுதிகளை அள்ளித் தெளித்து ஆட்சிக்கு வந்துள்ள விஜய் அரசு, எந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியாமல் தள்ளாடுகிறது.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் முதல், முதல்வர் வரை நிர்வாக அனுபவமின்மை, அரசின் பல செயல்பாடுகளிலும் வெளிப்படுகிறது. தினசரி நடைபெறக்கூடிய கொலைச் சம்பவங்கள், சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள், மக்களின் போராட்டங்கள் ஒருபுறம்; மறுபுறம் தொடர் மின்வெட்டு, சிறுகுறு தொழில் முதல் பெரிய நிறுவனங்கள் வரையிலும் சுய மின் உற்பத்தி மூலம் மட்டுமே செயல்படும் அவல நிலை என ஒட்டுமொத்தத்தில் எல்லா குறைபாடுகளும் ஒருங்கிணைந்து, பொருளாதார வளர்ச்சியை முடக்கிப் போட ஆரம்பித்துவிட்டது.

கடந்த ஆண்டு ஜூலை முதல் செப்டம்பர் வரை வரி வருவாயை ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் ஜிஎஸ்டி வரி வருமானம் ஒரு சதவீதமும், செப்டம்பரில் 5 சதவீதமும் குறைந்துள்ளது.

அதேநேரத்தில் பல மாநிலங்களில் வருவாய் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இது இப்படியே போனால், மிகப்பெரிய அளவுக்குப் பண ப்புழக்கம் குறைந்து, பெரும் பொரு ளாதார நெருக்கடி ஏற்படலாம். பலருக்கும் வேலை வாய்ப்புகளும் பறிபோகக் கூடும். தமிழகத்தில் வரி வருவாய் குறைந்து வருகிறது என்றாலே பிற வருவாய்களும் தானாகவே குறையும். எனவே, தமிழகத்தில் அரசியல், பொருளாதார, சமூகப் பிரளயங்களை விரைவில் நாம் எதிர்கொள்ள நேரிடும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# "ஸ்டாலின் பேசியது அவர் வகித்த, வகிக்கும் பொறுப்புக்கு உகந்தது அல்ல" – பெ.சண்முகம் கண்டனம்



சென்னை, அக்.04–

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் தாராபுரம் வேட்பாளர் குறித்து சொல்லி இருப்பது, அவர் வகித்த, வகிக்கும் பொறுப்புக்கு உகந்த செயல் அல்ல' என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'உருவக் கேலி செயலில் யார் ஈடுபட்டாலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்து வந்திருக்கிறது.

மூத்த அரசியல் தலைவர், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் தாராபுரம் வேட்பாளர் குறித்து சொல்லி இருப்பது வன்மையான கண்டனத்துக்குரியது. அவர் வகித்த, வகிக்கும் பொறுப்புக்கு உகந்த செயல் அல்ல என்பதை சுட்டிக் காட்டுகிறோம்' எனத் தெரிவித்துள்ளார்.

நேற்று தாராபுரத்தில் திமுக வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்பொழுது வேட்பாளர் சத்யபாமாவை 'பெட்டி பாமா, பல்டி பாமா' என விமர்சித்த அவர், சத்யபாமாவின் உருவம் குறித்தும் பேசியிருந்தார்.

இதனையடுத்து சத்யபாமாவை மு.க.ஸ்டாலின் உருவக்கேலி செய்து இழிவுபடுத்திப் பேசியதாக தமிழக வெற்றிக் கழக மாநில வழக்கறிஞர் அணி சார்பாக தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்தும் அலுவலர், டிஜிபி, சென்னை காவல் ஆணையர் ஆகியோரிடம் மு.க.ஸ்டாலின் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து முதல்வர் விஜய் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டம் என்ற பெயரில், தீய சக்தியான திமுக சார்பில் ஓர் அவதூறு மற்றும் அநாகரிகக் கூட்டத்தை நடத்தியுள்ளார், அதன் தலைவர் மு.க.ஸ்டாலின்.

நமது தாராபுரம் தொகுதி வேட்பாளரான சகோதரி சத்தியபாமா குறித்து, உருவ கேலி செய்து, மிகவும் அநாகரிகமாகப் பேசிப் புளகாங்கிதம் அடைந்துள்ளார். திமுக சார்பாக வளர்க்கப்பட்டு வரும் ஆபாசநதியை, வன்மநதியை, வக்கிரநதியை உருவாக்கியதே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய தான்தான் என்பதைப் பெருமையுடன் மார்தட்டி மகிழ்வுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

ஜனநாயகத்துக்கு விரோதமானவர்கள் திமுகவினர். ஆபாசமும் வன்மமும் வக்கிரமும் திமுகவின் மூலக்கூறிலும் மூளைக்கூறிலும் கலந்திருப்பதைத் தமிழக மக்கள் அனைவரும் காலங்காலமாக உணர்ந்தே வைத்திருக்கின்றனர்.

பெண்களைப் பற்றி ஆபாசமாகப் பேசுவதில், அதிலும் பெண்களை அருகில் வைத்துக்கொண்டே, அவர்கள் அருவருப்பாக உணர்வதைக்கூட கண்டுகொள்ளாமல் பேசுவதில் வல்லவர்களான இந்தத் தீய சக்திக் கூட்டத்திற்குத் தமிழக மக்களும் தாராபுரம் தொகுதி மக்களும் தக்க பதிலடியைக் கொடுக்கத்தான் போகின்றனர்.

தொடர்ந்து பெண்களை ஆபாசமாகப் பேசி வரும் தீய சக்தி திமுகவிற்குத் தமிழகப் பெண்களின் மகனாக, அண்ணனாக, தம்பியாக எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வேதங்களைப் போல பக்தியுடன் தமிழ்த்தாய் வாழ்த்தை பாட வேண்டும்: நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் வலியுறுத்தல்




சென்னை, அக்.04–

சென்னை: தமிழ்த்தாய் வாழ்த்து சம்பிரதாயத்துக்காக பாடப்படும் சடங்கு அல்ல, வேதங்களைப் பாடுவது போல் பக்தியுடன் அதனை பாட வேண்டும் என 'நேச்சர் கியூர் ஃபெஸ்ட்' விழாவில் நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் வலியுறுத்தினார்.

உலக சைவ உணவுக் கழகம், அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாணவர் மன்றம், ரோட்டரி சங்கம் சார்பில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, மக்களிடையே யோகா, இயற்கை மருத்துவம், ஆரோக்கியமான வாழ்க்கை முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 'நேச்சர் கியூர் ஃபெஸ்ட்– 2026' திருவிழா சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது.

இயற்கை மற்றும் நல்வாழ்வுக்கான விழிப்புணர்வுப் பேரணியுடன் தொடங்கிய விழாவில், பொதுமக்களுக்கு இலவச யோகா, இயற்கை மருத்துவ ஆலோசனை முகாம்கள் நடத்தப்பட்டன.

விழாவின் சிறப்பம்சமாக அமைக்கப்பட்டிருந்த இயற்கை உணவு கண்காட்சியில், 1,000–க்கும் மேற்பட்ட சமையல் எரிவாயு, எண்ணெய் இல்லாத பாரம்பரிய இயற்கை உணவு வகைகள் காட்சிப்படுத்தப்பட்டு நோவா உலக சாதனை அங்கீகாரம் பெறப்பட்டது.

தொடர்ந்து, 'சைவ உணவைத் தேர்ந்தெடுப்போம், யோகா செய்வோம்' என்ற விழிப்புணர்வு அணிவகுப்பும் நடைபெற்றது. தொடக்க விழாவில் இயற்கை மருத்துவம் சார்ந்த நூல்களை வெளியிட்டு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் பேசியதாவது: எந்தவொரு உயிருக்கும் துன்பம் தராத சைவ உணவு நமக்குள் மன அமைதியையும், மனத்தெளிவையும் தரும்.

திருவள்ளுவர், காந்தி, பிதாகரஸ், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், பெர்னாட் ஷா போன்ற அறிஞர்கள் கூட சைவ உணவின் சிறப்புகள் குறித்து பேசியுள்ளனர். அதற்காக சைவ உணவு என்பது உயர்ந்த தகுதி என்பதெல்லாம் அல்ல. சைவ உணவு உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களுடனும் நம்மை நெருக்கமாகப் பிணைக்கிறது.

உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் சென்று பணம் செலவழித்து உடம்பை வருத்துவதை விட, வீட்டில் யோகா செய்தால் 120 ஆண்டுகள் வரை கூட ஆரோக்கியமாக வாழலாம். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடியபோது உச்சரிப்பில் பிழை இருந்தது.

வேதங்களையும் உபநிடதங்களையும் பாடும்போது எவ்வளவு பக்தி இருக்குமோ, அதே அளவு பக்தியுடன், அர்த்தத்தை புரிந்துகொண்டு தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்வில் அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி முதல்வர் என்.மணவாளன், உலக சைவ உணவுக் கழக தலைவர் மஹாவீர் போத்ரா, நிறுவனர் தாராசந்த் துகார், செயலாளர் சுதாகர், ரோட்டரி மாவட்ட ஆளுநர் ஸ்ரீராம் துவூரி, அடையார் ஆனந்த பவன் நிர்வாக இயக்குநர் கே.டி. ஸ்ரீனிவாச ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161